# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2022ம் ஆண்டு மே மாதம் 04–ம் தேதி புதன் கிழமை*** *காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக்கூட்டம் நடைபெறும்.* | | | |
| 04.05. 2022 | 23 | **பொருள் எண். 1**<br>துவாக்குடி நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.32777/2021/EA-2 நாள்.04.01.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.150.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 711 நாள். 06.01.2022–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். செ.மு.ஆ.எண். 001/2022/DO1 நாள். 19.01.2022ல் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 10.02.2022 – தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது. |

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | துவாக்குடி நகராட்சியில் திருச்சி தஞ்சை சாலை பகுதியில் சர்வே எண். 175/6–ல் உள்ள தகன மேடையினை நவீன எரிவாயு தகன மேடையாக மாற்றுதல் | 150.00 | திரு. பி. பிரபாகர் | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| | | | திரு. M. பொன்னுசாமி | மதிப்பீட்டை விட 0.15% அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதிரு. பி.பிரபாகர் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1444/2021/இ1**

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| | 24 | **பொருள் எண். 2**<br>துவாக்குடி நகராட்சி திருவெறும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2021–22–ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை கடித செ.மு.ஆ.எண். 5793/2021/அ3 நாள்.27.01.2022– ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட | அனுமதிக்கப் பட்டது. |

பணி மேற்கொள்ள 13.01.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | துவாக்குடி நகராட்சி என்.ஜி.ஓ காலனியில் அங்கன்வாடி மையம் கட்டுதல் | 10.00 | திரு. பி. பிரபாகர் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | திரு. ஆர். சிவக்குமார் | மதிப்பீட்டை விட 0.41 % அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. பிரபாகர் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். இ1/1750/2021**

**<u>பொருள் எண். 3</u>**

25 துவாக்குடி நகராட்சியில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக இரண்டு எண்ணிக்கையிலான ஈப்பு வாகனம் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 10357/2022/எம்3 நாள். 25.04.2022–ல் அனுமதி வழங்கிய கடிதம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு. — அனுமதிக்கப் பட்டது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 908/இ1/2022**

**<u>பொருள் எண். 4</u>**

26 துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட இந்திரா நகர் அருகே அமையும் சர்வே எண். 372/2 & 3 ல் 3.50 ஏக்கர் பரப்பளவில் உத்தேச மனைப்பிரிவு அமைப்பதற்கு திரு. V. சேகர், பெரம்பலூர் என்பவர், நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு விண்ணப்பம் செய்து அனுமதி கோரியதில், நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலகம் வாயிலாக சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் செய்யப்பட்டு, சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், மூலை முடுக்குகள் பூங்கா உள்ளிட்ட உள்ளாட்சிக்கான பொது உபயோக இடம் மின்சார வாரியத்திற்கான தானமாக ஒப்படைக்க வேண்டிய இடம் ஆகியவற்றினை, ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபட நகலை இணைத்து பத்திரப்பதிவு அலுவலகத்தில் ஆணையாளர், துவாக்குடி நகராட்சி அவர்களின் பெயரில் பத்திரப்பதிவு செய்ய வேண்டுமென திருச்சிராப்பள்ளி, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கடித ந.க.எண்.3346/2021/திமா3 நாள்.24.09.2021 தேதியிட்ட கடிதம் வாயிலாக, மனைப்பிரிவு உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. — அனுமதிக்கப் பட்டது.

அதன்பேரில் மனைப்பிரிவு உரிமையாளர் திரு. V. சேகர் நகராட்சிக்கு தானமாக வழங்க வேண்டிய சாலைகள், பூங்கா, மூலை முடுக்குகள் ஆகியவற்றை திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 6627/2021 நாள். 01.10.2021 தேதிய தான

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்படைப்பு ஆவணம் வாயிலாகவும், தான ஒப்படைப்பு ஆவண எண்.6625/2021 நாள்.01.10.2021 தேதிய ஆவணம் வாயிலாக மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய இடத்தையும் தானமாக வழங்கியுள்ளார். சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு பொது ஒதுக்கீடுகளை மனைப்பிரிவு உரிமையாளர் தானமாக வழங்கியதன் அடிப்படையில் இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித ந.க.எண்.3346/2021/திம–3 நாள்.02.11.2021 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, மனைப்பிரிவு வரைபடத்திற்கு சிறப்பு நிபந்தனைகளுடன் ம.வ/ந.ஊ.இ.இ(திமா) எண்.68/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண். 69/2021 என எண்ணிடப்பட்டு, திட்ட அனுமதி உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தேச மனைப்பிரிவில் 74 எண்ணிக்கை மனைகள் அமைகிறது. அவற்றில் 20 மனைகள் பொருளாதாரத்தில் பின் தங்கியோருக்கான மனைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.<br>மேற்காணும் மனைப்பிரிவில், சாலை அமைக்கும் பணி, குடிநீர் பகிர்மான குழாய் பொருத்தும் பணி, கான்கிரிட் சுவருடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் ஏறத்தாழ முடியும் தருவாயில் உள்ளது.<br>மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளார். எனவே, உத்தேச மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்யும் பணியினை முழுவதும் முடித்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டும், உள்ளாட்சிக்குத் தான ஆவணம் மூலம் தானமாக வழங்கியுள்ள இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்து நகராட்சிக்கு சமர்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டும் துவாக்குடி நகராட்சி சர்வே எண்.372/2&3 இவற்றில் 3.50 ஏக்கர் பரப்பளவில் 74 மனைகளுடன் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு :** நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | 27 | **ந.க.எண்.1463/எப்1/2021**<br>**<u>பொருள் எண். 5</u>**<br>மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித ந.க.எண். தா5/8563/2021 நாள். 31.01.2022–ல் தெரிவித்துள்ள படி, நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022–க்கு பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் துவாக்குடி நகராட்சிக்கு வாக்கு எண்ணிக்கை மையமான உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி–19 பாதுகாப்புடன் வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, துவாக்குடி நகராட்சியில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் நாள். 19.02.2022 முதல் வாக்கு எண்ணிக்கை முடிவடையும் வரை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சியில் பாதுகாப்பாக வைப்பதற்கு வெல்ட்மெஸ் கொண்டு தடுப்பு அமைத்தல், மின்சாரம், மின்விளக்குகள் மற்றும் ஜெனரேட்டர் செட் ஆகிய முன்னேற்பாடுகளை செய்வதற்கு உத்தேச செலவினமாக ரூ.5,00,000/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**<br>**1.** மேற்படி, பணி அவசரப்பணி என்பதால் ஒப்பந்ததாரர் திரு. D. கோபாலகிருஷ்ணன், எண். 7/1, உடையார் நடுத்தெரு, மேலகல்கண்டார் கோட்டை, திருச்சி அவர்கள் மூலம் பணியை உடனடியாக மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதை மன்றம் | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 28 | அனுமதிக்கலாம்.<br>**2.** மேலும், பணி முடிவுற்று ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ. 4,88,566/– தொகையினை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1263/2021/சி1**<br>**<u>பொருள் எண். 6</u>**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படி, நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகங்களுக்கு பெயர்பலகை வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. எனவே, துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமாக உள்ள அம்மா உணவகத்திற்கு பெயர்பலகை வைக்கும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920–ன் பிரிவு 15–ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மேற்படி, பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. அன்னை க்ராபிக்ஸ் என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும், பணி முடிவுற்று நிறுவனத்தாரரிடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ. 12,500/– தொகையினை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங் கலாம்.<br>**ந.க.எண். இ1/693/2022** | அனுமதிக்கப் பட்டது. |
| | 29 | **<u>பொருள் எண். 7</u>**<br>துவாக்குடி நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 19.02.2022–ல் நடைபெற்று நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தல் 04.03.2022–ல் நடைபெற்றது. மேற்படி, நகர்மன்ற கூட்ட அறையில் உள்ள இருக்கை பழுதடைந்துள்ளதால் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரைகளின் படி, தேர்தலுக்கு பின், முதல் நகர்மன்ற கூட்டம் நடைபெற இருப்பதால் கூட்டம் நடைபெறுவதற்கு முன் இருக்கையினை மாற்றி புதியதாக இருக்கை வாங்குவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மேற்படி, பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ராயல் பர்னிச்சர்ஸ் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும், பணி முடிவுற்று நிறுவனத்தாரரிடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ. 25,960/– தொகையினை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1/121/2022** | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 30 | **<u>பொருள் எண். 8</u>**<br>துவாக்குடி நகராட்சியின் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுற்று வரும் முதல் நகர்மன்ற கூட்டத்திற்காக நகர்மன்ற தலைவர் நகர்மன்ற கூட்ட அறையினை ஆய்வு செய்தபோது கூறிய அறிவுரைகளின்படி, நகர்மன்ற கூட்ட அறையில் தமிழக அரசு முத்திரையுடன் கூடிய பித்தளையிலான தமிழ் எழுத்துக்கள் பதிப்பதற்கும், நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர், மேலாளர் அவர்கள் அமர்வதற்கு ஏதுவாக மேஜை மற்றும் ஒலி ஒளி அமைப்பு, நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களின் அறைகளில் மேஜைவிரிப்பு, நகராட்சி அலுவலக அறைகளின் முன்பு தரைவிரிப்பு போடவும் மற்றும் அறை கதவுகளின் ஏற்பட்டுள்ள சிறுசிறு பழுதுகளை சரிசெய்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**<br>1. மேற்படி, பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ள இந்நகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு. எம். ஜீவானந்தம் அவர்களுக்கு சம்மதம் கடிதம் பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும், பணி முடிவுற்றதற்கான பில்பட்டியல் தொகை ரூ. 2,99,047/– தொகையினை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: இ1/780/2022** | அனுமதிக்கப் பட்டது. |
| | 31 | **<u>பொருள் எண். 9</u>**<br>தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய சுற்றறிக்கை எண். U-35/2022 ந.க.எண்.2159/2022/எம்.இ2 நாள்.21.02.2022–ல் மறைமுகத் தேர்தல் கூட்டத்தினை தமிழ்நாடு நகராட்சிகள் (தேர்தல்) விதிகள், 2006 விதி 98–ன்படி, அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் மன்றக் கூட்டம் நடைபெறும் இடத்தில் மறைமுகத் தேர்தலில் நகர்மன்றத் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் கூட்ட நடவடிக்கை முழுமையையும் CCTV கேமரா ஒரு நாள் வாடகை (HIRE CHARGES) மூலம் பதிவு செய்திட கூறியுள்ளபடி, துவாக்குடி நகராட்சியின் முதல் தளத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூட்ட அறையில் நகராட்சியில் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் மறைமுகத் தேர்தலின் கூட்ட நடவடிக்கையினை முழுமையாக பதிவு செய்திடவும் மற்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய சுற்றறிக்கை எண். U-43/2022 RC.No.6/2022/எம்.இ2 நாள்.14.03.2022–ல் நிலைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் மன்றக் கூட்டம் நடைபெறும் இடத்தில் கூட்ட நடவடிக்கை முழுமையையும் CCTV ஒரு நாள் வாடகை (HIRE CHARGES) மூலம் பதிவு செய்திட கூறியுள்ளபடி, நகர்மன்ற கூட்ட அறையில் வரி விதிப்பு மேல்முறையீடு குழு, நியமனக் குழு மற்றும் ஒப்பந்தக்குழு ஆகிய நிலைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் கூட்ட நடவடிக்கை முழுவதும் பதிவு செய்திடவும் நகர்மன்ற கூட்ட அறையில் CCTV கேமரா ஒரு நாள் வாடகைக்கு (HIRE CHARGES) பொருத்தும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக்குறிப்பு :–**<br>1. மேற்படி, பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.Dhan Enterprises என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும், பணி முடிவுற்று நிறுவனத்தாரரிடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ. 4,256/– மற்றும் ரூ. 3,472/– ஆகமொத்தம் ரூ. 7,728/– தொகையினை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 1263/2021/சி1** | |
| | 32 | **பொருள் எண். 10**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் வார்டு எண். 2 முதல் 7 வரை மற்றும் 9 முதல் 21 வரையுள்ள விடுபட்ட பகுதிகளில் புதியதாக மின்கம்பங்கள் அமைத்து தருவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் வரப்படும் பட்டியலில் கண்ட தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்– 444/2020/இ1** | அனுமதிக்கப் பட்டது. |
| | 33 | **பொருள் எண். 11**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்பட்டு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலமாக நாள் ஒன்றுக்கு 3.00 MLD குடிநீர் தினசரி பெறப்பட்டு நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 05.04.2022 –ம் தேதியன்று திருவெறும்பூர் நீரேற்று நிலையம் அருகில் உள்ள இரயில் நிலையம் குறுக்கே செல்லும் பிரதான 400 MM குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தெரிவிக்கப்பட்டது. மறுநாள் முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணி தொடங்கி நடைபெறுவதால் துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வழங்கப்படவில்லை. எனவே, கோடைக்காலம் என்பதாலும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள பொதுமக்களின் நலன் கருதியும் குடிநீரின் அவசர அவசியம் கருதி தனியார் லாரி மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் துவாக்குடி நகராட்சிக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மேற்படி, பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா வாட்டர் சர்வீஸ் என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும், பணி முடிவுற்று நிறுவனத்தாரரிடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ. 2,80,500/– தொகையினை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1/968/2022** | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 34 | **<u>பொருள் எண். 12</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.2811/2021/இ1 நாள். 30.03.2022–ல் தெரிவித்துள்ளபடியும், நகராட்சிகளில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக நெறிமுறைகள் பற்றியும், மேலும், சாலைகள் தரமாக அமைக்கப்படுகின்றனவா என்பதை பணி நடைபெறும் போது நகராட்சி மூலம் கள ஆய்வு செய்ய தேவையான உபகரணங்கள் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் வாகனங்களில் எப்போதும் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. எனவே, துவாக்குடி நகராட்சியில் பல்வேறு திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைப்பணிகளுக்காகவும், தற்போது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைப்பணிகளை தள ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்க வேண்டியுள்ளது. எனவே இந்நகராட்சிக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு. மேலும் இந்நககராட்சியில் திட்ட பணிகள் நடைபெற்று வருவதால் பணிகளை தள ஆய்வு செய்வது மிக முக்கியம் என்பதால் மேற்படி உபகரணங்கள் வாங்குவதற்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920–ன் பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள ஆணையரின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>மேற்படி, பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Tamilnadu Engineering Instruments என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதற்கும் பட்டியலில் கண்ட தொகை ரூ. 1,21,599/- வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். இ1/1181/2021** | அனுமதிக்கப் பட்டது. |
| | 35 | **<u>பொருள் எண். 13</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் 2022–23 பொது நிதியின் (குடிநீர் நிதி) கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண். 4 முதல் 15 (8வது வார்டு தவிர) வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், அடிபம்புகள் மற்றும் மினி பவர் பம்புகள் வருடாந்திர பணி மேற்கொள்ளுதல் | 9.00 |
| 2. | வார்டு எண் 16முதல் 21 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், அடிபம்புகள் மற்றும் மினி பவர் பம்புகள் வருடாந்திர பணி மேற்கொள்ளுதல் | 6.00 |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். இ1/1080/2022**

| | | | |
|---|---|---|---|
| | 36 | **<u>பொருள் எண். 14</u>**<br>துவாக்குடி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22 –ன் கீழ் வார்டு எண். 8 வ.உ.சி நகர் பகுதியில் நூலகம் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.36.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 27519–37/2021/P2 நாள்.31.03.2022–ல் அனுமதி வழங்கிய கடிதம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1 /1193 / 2021** | அனுமதிக்கப் பட்டது. |

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.

# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2022ம் ஆண்டு மே மாதம் 20–ம் தேதி வெள்ளிக்கிழமை*** *காலை 10.00 மணிக்கு துவாக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக்கூட்டம் நடைபெறும்.* | | | |
| 20.05.22 | 37 | **<u>பொருள் எண். 1</u>**<br>அரசு ஆணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ன் படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், துவாக்குடி நகராட்சி சொத்துவரி மற்றும் காலி மனைவரியினை விடுபட்டுள்ள சாலைகள் தெருக்கள் சந்துக்கள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும் மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 01.04.2022 முதல் பொது சீராய்வு செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.22 நாள்.11.04.2022 படி மண்டல அடிப்படை மதிப்பு (Zone Value) 01.04.2022 முதல் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு மண்டல அடிப்படையில் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு இவ்வறிவிக்கையினை திருச்சி பதிப்பு தினமணி மற்றும் மாலைமுரசு நாளிதழில் 13.04.2022 ஆங்கிலம் நாளிதழில் THE TIMES OF INDIA –ல் 14.04.2022–ல் பிரசுரம் செய்யப்பட்டது. மேலும், இது குறித்து ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் இவ்வறிவிப்பு வெளியிட்ட 30 தினங்களுக்குள் எழுத்துப்பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ நகராட்சி ஆணையாளருக்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்பட்டது. 30 நாட்கள் காலக்கெடு முடிவடைந்த நிலையில் ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறாததால் துவாக்குடி நகராட்சி பொது சீராய்வு மண்டல மதிப்பு நகர்மன்ற தீர்மான எண்.22–ன் படி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.** 919/அ1/2022 | அனுமதிக்கப் பட்டது. |

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.